முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,

முதன்மை உதவி அமர்வு நீதிபதி.

S.C. No.24/2023

அ.சா.10 தேதி.30.01.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோப்பெருந்தேவி | க/பெ. | வெற்றிவேல் |
| வயது | 51 | தொழில் | காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல் நிலையம், |
| கிராமம் | உடுமலைப்பேட்டை. | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர் ).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது உடுமலைப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.07.2021 ஆம் தேதி நான் மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது மயிலாடுதுறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விடுப்பில் இருந்ததால் நான் பொறுப்பு காவல் ஆய்வாளராக பொறுப்பேற்று காவல் நிலைய குற்ற எண் 1481/2021 சட்டப்பிரிவு 294(b), 324, 307 இதச வழக்கினை பார்வையிட்டு இவ்வழக்கின் இரண்டாம் எதிரியான இராஜலெட்சுமி என்பவர் நீதிமன்ற முன்ஜாமீனில் சென்றுள்ள விபரம் தெரிய வந்தது. இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி 1ற்கு தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் காயச்சான்றிதழினைப் பெற்றேன், சாட்சி1ற்கு ஏற்பட்டுள்ள காயம் கொடுங்காயம் என்று சான்று பெற்று வழக்கின் சட்டப்பிரிவினை 294(b), 324, 307 இதச லிருந்து 294(b), 324, 326, 307 இதச என மாற்றம் செய்து சட்ட மாற்று அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் நித்தியானந்தன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த மயிலாடுதுறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 294(b), 324, 326, 307 இதசன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி

வைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

காயம்பட்ட நபர்களின் X–ray report எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த மயிலாடுதுறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் மற்றும் மருத்துவர் நித்தியானந்தனை தவிர வேறு நபர்களை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் விசாரணை அதிகாரி ஆய்வாளர் பாலசுப்ரமணியன் விசாரித்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் ஆனால் எழுத்து மூல வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை, மருத்துவரை நான் விசாரணை செய்தபோது அவர் காயம்பட்ட நபர் தன்னிடம் 5 நபர்கள் கட்டையால் தாக்கினார்கள் என்று கூறிய விபரத்தை எனது விசாரணையில் சொல்லவில்லை. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த குற்ற வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.